சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

AS. No. 16/2020

பெயர் திருமதி. காந்தா அம்மாள் நாள்.18.02.2026
க/பெ. மணியன்

**<u>பிரதிவாதி சாட்சி 1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள்/ எதிர் மேல் முறையீட்டாளர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) கிரைய ஆவணத்தில் சொத்து எழுதிக் கொடுக்கப்பட்டு இருந்தால் அது வில்லங்கத்தில் வரும் என்று சொன்னால் சரிதான். நான் வழக்கு சொத்தை பொறுத்து வில்லங்கம் வாங்கி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.த.சா.ஆ.14 அசல் ஆவணத்தில் என்ன உள்ளது என்பதைக் காட்டக்கூடிய ஆவணம் என்றால் எனக்கு தெரியாது. அசல் ஆவணத்தில் அடித்தல், திருத்தல் இருப்பதை காண்பிக்க பி.த.சா.ஆ.14 தாக்கல் செய்துள்ளேன். பி.த.சா.ஆ.14 யை வைத்து பி.த.சா.ஆ.1ல் எவ்வித மோசடியும் நடைபெறவில்லை என்று சொல்ல இயலாது என்று சொன்னால் சரியல்ல. பி.த.சா.ஆ.1 மற்றும் பி.த.சா.ஆ.14 எப்போது எழுதப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் பி.த.சா.ஆ.1 ஆனது 1992 லும், பி.த.சா.ஆ.14 எப்போது எழுதப்பட்டது என்று நியாபகம் இல்லை.

2) பி.த.சா.ஆ.14 ஆவண எழுத்தரால் எப்போது எழுதப்பட்டு, கொடுக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. பி.த.சா.ஆ.1 மற்றும் பி.த.சா.ஆ.14 ஒரே நேரத்தில் எழுதி, தாக்கல் செய்யப்பட்டதா என்று ஆவண எழுத்தரை விசாரித்தால் தான் தெரியும்.

பி.த.சா.ஆ.14 ன் கீழ் வழக்கு சொத்து எனக்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டதா என்று ஏற்க முடியாது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை – இல்லை.**